[1972 மார்ச் 23

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அதுபற்றி, அந்த ஊராட்சியே தீர்மானம் போட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அரசாங்கத்திற்கு அனுப்புவார்களானுல், அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கும்.

Separate convict wards in headquarters hospitals

* 652 Q.—DR. H. V. HANDE: THIRU K. A WAHAB: } Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any proposal to construct convict wards in all the district headquarters hospitals; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) குற்றவாளிகளுக்கு என்று மாவட்ட தலைமை மருத்துவ மனைகளில் தனி வார்டுகள் திட்டமிரமமாக அமைக்கப்பட்டுவருகின்றன. சேலம், திருச்சி, நாகர்கோவில் மாவட்ட தலைமை மருத்துவ மனைகளில் குற்றவாளிகளுக்கென்று தனி வார்டுகள் உள்ளன.

நீலகிரி மாவட்ட தலைமை மருத்துவமனையில் குற்றவாளிகளுக்கென்று தனி வார்டு கட்ட 1971-ல் உத்திரவு அளிக்கப்பட்டு வேலை நடந்து கொண்டு இருக்கின்றது.

1972–73-ல் இராமநாதபுரம், நாகப்பட்டினத்திலுள்ள தலைமை மருத்துவ மனைகளில் குற்றவாளிகளுக்கென்று தனி வார்டுகள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. கே. எ. வகாப்: புகழ்பெற்ற சிறைச்சாலைகள் இருக்கிற வேலூர் பாளையங்கோட்டை போன்ற இடங்களிலும் உள்ள ஆஸ்பத்திரிகள் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த பட்டியலில் இல்லை. அந்த இடங்களில் உள்ள மருத்துவமனைகளிலும் தனி வார்டு அமைக்க அரசு முயற்சி எடுத்துக்கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: கூடுமானவரையில் எல்லா மாவட்ட மருத்துவமனைகளிலும் தனி வார்டுகள் அமைக்கப்படவேண்டும் என்ற திட்டம் இருக்கிறது. ஆண்டுக்கு இரண்டு இரண்டு இடங்களாக எடுத்துத்தான் நிறைவேற்றப்படும்.

வேலூரிலுள்ள சி. எம். சி. மருத்துவ மனை

*653 வினு—திரு. மா. பா. சாரதி: மாண்புகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் சி. எம். சி. ஆஸ்பத்திரிக்கு சென்ற ஆண்டு தமிழ்நாடு அரசால் கடனும், மானியமும் எவ்வளவு வழங்கப்பட்டது ?

(இ) அவை ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றனவா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) 1970–71-ஆம் ஆண்டில், வேலூரிலுள்ள கிறிஸ்துவ மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்கு கடன் எதும் வழங்கப்படவில்லை. ஆண்டொன்றுக்கு ரூ. 20,000 என்ற பேரளவுக்கு உட்பட்டு, இந்த நிறுவனத்தால் மருத்துவ உதவி அளிக்கப்படும் வறிய நோயாளி ஒவ்வொருவருக்கும் நாள் ஒன்றுக்கு 50 காசு (ஐம்பது) வீதம் பேணுதல் மானியம், இந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு வருகிறது. 1970–71-ம் ஆண்டுக்குள்ள பேணுதல் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

திரு. தோப்பூர் திருவேங்கடம் : வேலூரில் உள்ள கிறிஸ்துவ மருத்துவக் கல்லூரியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்கள் யாரையும் சேர்ப்பது இல்லை என்ற புகார் வந்துள்ளதா ? அப்படியிருந்தால் அரசு அதன் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மூலக் கேள்வி வறிய நோயாளிகளைப் பேணுவதற்கு பேணுதல் மானியம் அளிப்பது பற்றியது. கல்லூரியைப்பற்றியோ, மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதுபற்றியோ இதற்குரிய சம்பந்தம் இல்லை.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, நம்முடைய அரசாங்கத்தின் சார்பில் பேணுதல் மானியம் ஒவ்வொரு நோயாளிக்கும் 50 காசு என்ற அளவில் கொடுக்கப்படுகிறது. நம்முடைய மானியத் தொகை சரியான முறையில் செலவிடப்படுகிறதா என்பதைப் பார்க்க நம்முடைய அரசாங்கப் பிரதிநிதி அந்த மருத்துவ நிலையத்தில் நியமிக்கப்பட்டிருக்கிறாரா ? ஹாஸ்பிடல் கமிட்டி என்று உருவாக்கி, அதில் நமதுடைய பிரதிநிதியையும் போட அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இப்படிப்பட்ட வறிய நோயாளிகளுக்கு பேணுதல் மானியம் முதன்முறையாக வழங்கப்பட்டபோதே ஒப்புக்கொள்ளப்பட்ட விதிமுறைகளின்படி எப்போது வேண்டுமானாலும் மருத்துவத் துறையின் இயக்குநர் அந்த மருத்துவ மனையைப் பார்வையிடலாம் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. The institution should be open to periodical inspection by the D.H.S. & F.P. or other officers of the Medical Department and should be maintained to the satisfaction of the D.H.S. & F.P.' என்பது விதி. ஆகவே அந்த மருத்துவ மனை செம்மையாக நடைபெற்று வருகிறது என்ற கருத்தோடு அரசாங்கம் பேணுதல் மானியத்தை அளித்து வருகிறது.

மேற்கு இராமநாதபுரம் மாவட்டப் பதிவாளர் அலுவலகம்

*654 வினா—திரு. எஸ். அழகுத் தேவர் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேற்கு இராமநாதபுரம் மாவட்டப் பதிவாளர் அலுவலகம் விருதுநகரிலிருந்து வேறு இடத்திற்கு மாற்றும் திட்டம் எதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில் மேற்படி அலுவலகம் சாத்தூருக்கு மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?